# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை
# சட்டபீடம்
## சட்டமாணிப் பரீட்சை (நிகழ்நிலை) – ஆண்டு IV, 2022

## கம்பனிச் சட்டம்
(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

**எவையேனும் மூன்று (03)** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

1. "இன்றைய நவீன சமுதாயத்தில், நிறுவனங்களின் செயற்பாடுகளின் நோக்கம் மற்றும் அதன் அதிகாரத்தின் பரப்பளவு மிகவும் விரிவானதாகையினால் அவற்றின் செயல்களின் விளைவுகள் மனித மற்றும் சமூக வாழ்கையில் ஒவ்வொரு அங்கத்தினையும் பாதிக்கின்றன. அவை கட்டுப்படுத்தப்படாவிட்டால், பாதிப்புக்கள் மற்றும் குற்றங்களைச் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் பேரழிவிலான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். நிறுவனங்களானவை வரலாற்று ரீதியாகக் கடுமையான கட்டுப்பாடு மற்றும் பொறுப்புக் கூறலுக்கு உட்பட்ட அமைப்புக்களிலிருந்து விலக்குப் பெற்றிருந்தாலும் நிறுவன சமூகப் பொறுப்பு (corporate social responsibility) மற்றும் நிறுவன குற்றப்பொறுப்பு (corporate criminal liability) போன்ற எண்ணக்கோட்பாடுகள், சமூகத்தினை எதிர்மறையாகப் பாதிக்கும் வகையில் நிறுவனங்கள் தங்கள் அதிகாரங்களைப் பயன்படுத்தாதிருப்பதனை உறுதி செய்துள்ளன."

   மேற்குறிப்பிட்ட கூற்றின் வலிதாந்தன்மையினை விமர்சன ரீதியாக ஆராய்க.

   (100 புள்ளிகள்)

2. குழந்தை உணவுத் தயாரிக்கும் நிறுவனமான Tiny Spoon Limited (TSL) என்பதின் ஐந்து பங்குதாரர்களில் லகிரு என்பவனும் ஒருவனாவான். TSL இன் பங்குகளில் நாற்பத்தி எட்டு வீதத்தினை (48%) லகிரு வைத்துள்ள அதேவேளை மற்றைய நான்கு பங்குதாரர்களான விஷா, நிராஜ், சஸ்னா மற்றும் சந்து ஆகியோர் ஒவ்வொருவரும் பதின்மூன்று சதவீத (13%) பங்குகளை வைத்துள்ளனர். நாட்டின் குழந்தை ஆரோக்கியத்தில் நிபுணத்துவம் பெற்ற லகிரு, விஷா மற்றும் சந்து ஆகிய மூன்று ஊட்டச்சத்து நிபுணர்களும் TSL இன் இயக்குனர் சபையாக (board of directors) உள்ளனர். சந்து இயக்குனரொருவனாக இருந்தபோதிலும் மற்றைய இருவரும் அவனை நிர்வாகத் தீர்மானங்களில் இருந்து விலக்கி வைத்துள்ளனர். பத்து ஆண்டுகளுக்கு மேலாக வலுவானதொரு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் குழுவொன்றினை TSL பராமரித்து வருகின்றது. 2020 ஆம் ஆண்டு முதல், லகிரு, இளம் ஆராய்ச்சிக் குழுவொன்றுடன் புதிய ஆராய்ச்சித் திட்டங்களைச் சிறப்பாகச் செய்வதுடன் அதன் முதன்மை ஆராய்சியாளனாகவும் இருக்கின்றான். TSL முன்பு செலவிட்டதனையும் விட இரண்டு மடங்கு அதிகமாகச் செலவிடுகின்றது. விஷா சில ஆராய்ச்சித் திட்டங்களுக்குப் பொறுப்பாக இருப்பதோடு அவ்வணியிடமிருந்து தொழில்முறை

கட்டணமொன்றினையும் பெறுகின்றாள். ஆராய்ச்சி வெளியகப்படுத்துவதற்கு மேலதிகமாக, TSL இன் உள்ளக ஆராய்ச்சிக் குழுவினால் கண்டுபிடிக்கப்பட்ட புதிய தயாரிப்புக்கு இரண்டு ஆக்க உரிமைகளை லகிரு மற்றும் விஷா பதிவுசெய்வதோடு ஏராளமான உரிம ஒப்பந்தங்களிலும் ஈடுபட்டனர். 2020 ஆம் ஆண்டிலிருந்து TSL இன் நிதிக் கையிருப்பு ரூ. 50 மில்லியனால் குறைவடைந்துள்ளதாகக் குறிப்பிட்டுச் சந்து எதிர்க்கின்றான். உணவுப் பொருட்களின் தரத்தைப் பரிசோதனை செய்வதற்கு இயக்குனர்சபை நடவடிக்கை எடுக்கத்தவறியதாகவும் தரம் குறைந்த குழந்தை உணவுகளைச் சந்தையில் நுழைய அனுமதித்ததாகவும், இது எதிர்காலத்தில் அதன் பொருளின் நற்பெயருக்குக் கேடு விளைவிக்கும் என்றும் நிராஜ் குற்றம் சாட்டினான்.

இளநிலை மருத்துவ அதிகாரியான சஸ்னா, தனது எதிர்கால வாய்ப்புக்கள் காரணமாக, அந் நடவடிக்கைகளில் அதிருப்தி அடைந்திருந்தாலும் நடவடிக்கை எடுப்பதனை அவள் தவிர்க்கின்றாள். கடந்த இரண்டு ஆண்டுகளாக, TSL சிரமங்களைச் சந்தித்து வருகின்றது.

நிறுவனத்தின் சிறுபான்மை பங்குதார்களான சந்து மற்றும் நிராஜ் ஆகியோர் தம்மால் எடுக்கக் கூடியதான நடவடிக்கைகள் தொடர்பில் உமது ஆலோசனையை நாடுகின்றார்கள். தொடர்புடைய சட்ட ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டத்துடன் தொடர்புறுத்தி அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

(100 புள்ளிகள்)

3. (அ). நிறுவனத்தின் ஊக்குவிப்பாளர்கள் மற்றும் வர்த்தகர்களின் மத்தியில் ultra-virus என்ற கருத்து மிகவும் பிரபல்யமற்றதாகவும் சிக்கல் நிறைந்ததாகவும் இருப்பதனை ஒரு காலத்தில் கண்டனர். எவ்வாறாயிருப்பினும், நீதித்துறை விழிப்புணர்வின் காரணமாக, அது கிட்டத்தட்ட தளராத வீரியத்துடன் தனது ஆதிக்கத்தினைத் தக்க வைத்துக்கொண்டது.

Ultra-virus கோட்பாட்டிற்கான இலங்கை நீதிமன்றங்களின் அணுகுமுறையின் பின்னணியில் இக்கூற்றுடன் நீர் எந்தளவிற்கு உடன்படுகின்றீர்? இலங்கையின் வர்த்தக பரப்பில் இக்கோட்பாட்டின் எதிர்காலத்தினை கவனத்திற்கொண்டு தொடர்புடைய தீர்ப்புச் சட்டம் மற்றும் சட்டரீதியான ஏற்பாடுகளுடன் தொடர்புறுத்தி உமது விடையினை ஆதரிக்க.

(60 புள்ளிகள்)

(ஆ) புதுப்பிக்கக்கூடிய வள (renewable energy) நிறுவனமொன்றான, Evergreen Agency (PLC) (கம்பனி) என்பதில் ஆதம் மற்றும் சுமித் ஆகியோர் இயக்குனர்களாவர். புதுப்பித்தல் வளத்திற்கான அதிகரித்துவரும் தேவையிக்குப் பதிலளிக்கும் முகமாக, இலங்கையின் வள சந்தையில் கிடைக்கும் ஏனைய solar penal உடன் ஒப்பிடுகையில் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட ஆனால் விலை குறைந்த solar penal களை இறக்குமதி செய்வதற்கு அக்கம்பனி திட்டமிட்டது. இந்த திட்டத்திற்கு நிதியளிப்பதற்காக, இறக்குமதி அனுமதிக்கான விண்ணப்பம் இன்னமும் நிலுவையில் உள்ள போதிலும், குறிப்பிட்ட வகை solar penal களை இறக்குமதி செய்வதற்கு நிறுவனம் அங்கீகாரத்தை பெற்றுள்ளது என்பதாக குறிப்பிட்டு ஆதமும் சுமித்தும் முற்பகர்வுகள் (prospectus) ஒன்றினை வெளியிட்டனர். இத்திட்டத்தின் மகத்தான எதிர்கால வளர்ச்சித்திறனைக் கருத்திற் கொண்டு, மார்க் என்பவன் நிறுவனத்தின் கணிசமான அளவு பங்குகளை வாங்கினான். இருப்பினும், கம்பனியினால் அவசியமான இறக்குமதி அனுமதியினைப் பெற முடியவில்லை, எனவே, அத்திட்டம் கைவிடப்பட்டது.

ஆதம் மற்றும் சுமித்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க மார்க் விரும்புகிறான். இலங்கைச் சட்டத்தின் கீழ் அவனுக்குக் கிடைக்கும் சட்டப் பரிகாரங்கள் தொடர்பில் மார்க்கிற்கு ஆலோசனை வழங்குக.

(40 புள்ளிகள்)

4. (அ) மூலதன பராமரிப்புக் கோட்பாட்டின் ஆதரவாளர்கள், அதன் அமுலாக்கம் கடன்கொடுனர்களைப் பங்கு மூலதனத்தின் அதிகப்படியான விநியோகத்திலிருந்து பாதுகாத்துக் கடன்கொடுனரின் பாதுகாப்பை உறுதி செய்வதாகக் கோருகின்றனர். மாறாக, பணம் செலுத்துதல் மற்றும் சமபங்கு வழங்கல் மீதான கட்டுப்பாடுகள் நிறுவனமொன்றின் நிதி முடிவெடுப்பதனை சிதைத்து, பொருளாதார ரீதியாக சாத்தியமான பரிவர்த்தனைகளில் ஈடுபடுவதிலிருந்து தடுக்கிறது என்று எதிர்ப்பாளர்கள் வாதிடுகின்றனர்.

இம் முரண்பாடுகளைத் தீர்ப்பதில் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டம் வெற்றி பெற்றுள்ளதா? பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகளுடன் தொர்புறுத்தி ஆராய்க.

(40 புள்ளிகள்)

(ஆ). General Motors Company (PLC) (கம்பனி) *சீலேண்டில்* நன்கு அறியப்பட்ட கார் உற்பத்திக் கம்பனியாகும். இருப்பினும், தொற்றுநோய் காலப்பகுதியில் கம்பனியின் நிதி நிலைமை மோசமடைந்ததோடு அது நாட்டின் பொருளாதார நெருக்கடியின் நிமிர்த்தம் தீவிரமடைந்தது. கம்பனியின் நிகர சொத்துக்கள் அதன் கூறப்பட்ட மூலதனத்தின் (stated capital) பாதிக்குக் குறைவாகக் குறைவடைந்துள்ளதால், நிதி இயக்குனரான சென் என்பவன், உடனடி சபைக் கூட்டத்தினைக் கூட்டி, கம்பனியின் கடனை மறுகட்டமைக்க முன்மொழிந்தான்.

இருப்பினும், சந்தைப்படுத்தல் இயக்குனரான ஜாய் என்பவன், கம்பனிப் புதிய வணிக வழிகளில், குறிப்பாக மின்சார மிதிவண்டிகளைத் தயாரித்து விற்பனை செய்வதன் மூலம் மீண்டு வரலாம் என முன்மொழிந்தான். சென்னைத் தவிர, மற்ற சபை உறுப்பினர்கள் புதிய முயற்சியினைத் தொடங்க ஒப்புக் கொண்டனர். எவ்வாறாயினும், கம்பனியினால் தயாரிக்கப்படும் மின்சார மிதிவண்டிக்கான தேவை அவற்றின் உற்பத்திக் குறைப்பாடுகள் காரணமாகப் பலவீனமாக இருந்ததுடன், அவை மரணமொன்று உட்பட ஏராளமான காயங்கள் மற்றும் விபத்துக்களை ஏற்படுத்தின. இதன் விளைவாக, மின்சார மிதிவண்டிகளைத் தயாரிப்பதில் முறையான பாதுகாப்புத் தரங்களை பின்பற்றவில்லை என *சீலேண்டின்* நுகர்வோர் விவகார அதிகாரசபையால் கம்பனி மீது வழக்குத் தொடரப்பட்டது.

*சீலேண்டின்* சட்ட அமைப்பு இலங்கையின் சட்ட அமைப்பை ஒத்தாகக் கருதி, மேற்கூறிய சூழ்நிலையில் எழும் சட்டச் சிக்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து சட்டக் கருத்தொன்றைத் தயாரிக்க.

(60 புள்ளிகள்)

5. அர்ஜுன், சுசிலா, கபிலா, பூர்ணிமா, மதுதி மற்றும் நிஷாலி ஆகியோர் 2017 இல் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றான Fancy Fabrics Ltd என்பதின் இயக்குனர்களாவர். அந்நிறுவனம் ஆரம்பிக்க முன்னர் அவர்களது நன்கு திட்டமிடப்பட்ட உத்தி பயனளித்ததோடு

வியாபாரம் வேகமாக வளர்ச்சியடைந்தது. 2019 ஆம் ஆண்டில் வணிகம் தொடர்ந்து செழித்தோங்கிய நிலையில், அதே ஆண்டு ஜுன் மாதம் எதிர்பாராத தொரு சவாலைச் சபை எதிர்கொண்டது, கபில உண்மையில், வெயியேற்றப்படாத வங்குரோத்துக்காரனொருவனாக (undischarged insolvent) அறியப்பட்டதுடன், இதுபற்றி அவனது ஏனைய இணை இயக்குனர்களுக்குத் தெரிந்திரிருக்கவில்லை. இதனால் அதிர்ச்சியுற்ற மற்றைய இயக்குனர்கள் கபிலவை இராஜினாமா செய்ய வேண்டுமென வலியுறுத்தினர். கபில, தனது இராஜினாமாவானது தான் ஈடுபட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட முடிவுகளைச் செல்லாதாக்கும் என்று மிரட்டி மறுத்தான். மற்றைய இயக்குனர்கள் தயக்கம் கொண்டார்களெனினும் அவனை பதவியில் தொடர அனுமதித்தனர்.

2020 ஆம் ஆண்டில் தொற்றுநோயின் விளைவுகளை அது உணரத்தொடங்கிய போதும், நிறுவனம் தொடர்ந்து விருத்தியடைந்தது. அரசாங்கத்தின் நடமாட்டு முடக்கல் மற்றும் கடையில் பொருட்களை வாங்கும் போது மற்றவர்களுடன் கலந்து கொள்வதன் மூலம் தொற்றுதலுக்கு தங்களை வெளிப்படுத்த மக்கள் தயக்கம் காட்டியதன் விளைவாக, நிறுவனம் விற்பனையில் பாரிய குறைப்புக்களை எதிர்கொள்கின்றது. இந்த சவால்களை எதிர்கொள்ளும் முயற்சியில் நிறுவனம் தனது வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கு தனது தயாரிப்புக்களை விநியோகிக்கத் தொடங்குவது தொடர்பாக நிசாலி பரிந்துரைக்கிறாள். ஏனைய இயக்குனர்கள் இதற்கு உடன்பட்டனர். அர்ஜுனின் ஆலோசனை மற்றும் பரிந்துரையின் பேரில், அண்மையில் ஆராம்பிக்கப்பட்ட கம்பனியொன்றான Pass It On Delivery Service Ltd. என்பதுடன் இணைந்து செயற்பட Fancy Fabrics முடிவு செய்கிறது. Pass It On Delivery Service Ltd. நிறுவனத்தின் நிறுவனத்தின் தொடக்கநிலை இயக்குனர் அர்ஜுனின் புதல்வன் ரமேஷ் ஆவான் என்பது மற்ற இயக்குனர்களுக்குத் தெரியாது. இந்த விநியோக சேவையின் மூலம் Fancy Fabric அனுப்பும் ஒவ்வாரு விநியோகத்திற்கும் அர்ஜுன் 2% தரகு பெறுகிறான்.

பூர்ணிமாவின் இயக்குனரென்னும் பதவிக்கான அவளது அர்பணிப்புக் குறைந்து வருவதைச் சபை அவதானிக்கின்றது. தற்போதைய நடமாட்டுக் கட்டுப்பாடு மற்றும் Covid தொற்றுப்பரவல் காரணமாக Zoom இல் பெருபாலான சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்ட போதிலும் பூர்ணிமா அவற்றின் பலவற்றில் கலந்து கொள்ளத் தவறிவிட்டாள். அவள் அவ்வாறு கலந்து கொண்ட போதிலும் கரந்துரையாடல்களில் ஆர்வமாகப் பங்கேட்கவில்லை என்பதோடு நிறுவனத்தின் செயற்பாடுகள் மற்றும் நலன்களுடன் தொடர்பற்றவளாக காணப்பட்டாள்.

கோவிட் மூலம் ஏற்பட்டுள்ள சிரமங்களைச் சமாளிக்க நிறுவனம் தனது சிறந்த முயற்சிகளை மேற்கொண்டு வரும் நிலையில், இலங்கையின் பொருளாதார நெருக்கடியினால் வணிகத்திற்கு ஏற்பட்ட கூடுதல் தாக்கங்களினால் நிறுவனம் உண்மையிலேயே நிலைத்திருக்கப் போராடி வருகின்றது என்பது தெளிவாகியது. நிறுவனம் அதன் கட்டவேண்டிய கடன்களைச் செலுத்த முடியாமல் தவித்தால், நிறுவனம் கலைக்கப்படுவதனைக் கருத்தில் கொள்ளவேண்டுமா என்பதனை விவாதிக்கச் சுசீலா சபைக் கூட்டமொன்றினை 2022 ஆம் ஆண்டின் முற்பகுதியில் அழைத்தாள். எவ்வாறாயினும், சவால்கள் இருந்த போதிலும், நிறுவனத்தின் வணிக நடவடிக்கைகளைத் தொடர இயக்குனர்கள் சபை முடிவு செய்தது. இதையடுத்து, நிறுவனம் ஒழித்துக்கட்டப்பட்டது (liquidation).

Fancy Fabrics Ltd இன் இயக்குனர்கள் தொடர்பாக எழுந்துள்ள சட்டச் சிக்கல்கள் தொடர்பில் விவாதிக்க.

(100 புள்ளிகள்)

6. ரவி, நிலேஷ், தினேஷ் மற்றும் சுனில் ஆகியோர் S&S Computer (SC) என்ற கணனிப்பாகங்களை விற்பனை செய்யும் வியாபாரத்தின் பங்குதாரர்களாவர். பின்வரும் நிகழ்வுகளில் எழுகின்ற சட்டச் சிக்கல்கள் தொடர்பிலும் பங்குதார்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலும் பொருத்தமான அதிகாரங்களினால் தொடர்புறுத்தி ஆராய்க.

(அ). ரவி மற்றும் நிலேஷ் ஏனைய இரு பங்குதாரர்களை விட மூலதனத்தில் அதிக மூலதன விகிதத்தினை வைத்திருப்பதுடன் வியாபாரத்தினை நிர்வகிப்பதோடு அனைத்து முக்கியமான தீர்மானங்களையும் எடுக்கின்றனர். அவர்கள் வழக்கமாக வர்த்தக கண்காட்சிகளில் கலந்து கொள்வதோடு SC இற்குப் பொருட்களைத் தள்ளுபடி விலையில் கொள்வனவு செய்வதற்கும் வெளிநாடுகளுக்கு பயணிப்பர். பங்குடைமை ஒப்பந்தமானது பங்குதாரர்கள் பங்குடைமை சார்பாக ஒப்பந்தம் செய்யும் எந்தவொரு பங்குதாரருக்கம் ரூபா 1,000,000 கொள்வனவு எல்லையினை விதித்தது. ரவி தனது தனிப்பட்ட வெளிநாட்டு பயணத்தின் போது வர்த்தக கண்காட்சியியொன்றில் மடிக்கணனிகளுக்கான சிறந்த விலையொன்றினைப் பெற்றான். அது வர்த்தகக் கண்காட்சியின் கடைசி நாள் என்பதனால், ஏனைய பங்காளர்களின் அனுமதியின்றி, மடிக்கணனிகளை ரூபா 1,500,000 கொள்வனவு செய்தான். நிலேஷ் கணிசமான அளவு USB Drives களினை வெளிநாட்டிலிருக்கும் தனது நண்பனிடமிருந்து குறைந்த விலைக்குக் கொள்வனவு செய்தான். அவற்றினை SC இற்கு சந்தை விலையில் விற்றான்.

(40 புள்ளிகள்)

(ஆ) தினேஷ் D&A Electronics (D&A) நிறுவனத்திடம் இருந்து சில இரண்டாம் தரக் கணனி உதிரிப்பாகங்களைப் பங்குடைமையின் பெயரில் ரூபா 700,000 இற்கு கொள்வனவு செய்தான். தினேஷின் சகோதரன் குசும் என்னவன் தான் D&A இன் தனி உரிமையாளனாவான் என்பது ஏனைய பங்காளர்கள் அறிந்திருக்கவில்லை. D&A ஆனது, அதன் தயாரிப்புக்களின் தரம் தொடர்பில் மோசமான நற்பெயரொன்றினை கொண்டிருந்ததோடு அதன் பெரும்பாலான பொருட்கள் உத்தரவாதமின்றி வாடிக்கையாளர்களுக்கு விற்கப்பட்டன. SC ஆனது அதன் வாடிக்கையாளர் மத்தியில் நற்பெயரொன்றினைத் தக்கவைத்துக் கொண்டுள்ளதுடன் அதன் சிறந்த வாடிக்கையாளர் சேவைக்கான தனித்துவமானதொரு இடத்தினைப் பெற்றது. அங்கு விற்கப்படும் பெரும்பாலான பொருட்கள் புத்தம்புதியது என்பதோடு கணிசமான உத்தரவாத காலத்துடன் விற்கப்பட்டது. SC இனால் கணனி உதிரிப்பாகங்களை இலாபமொன்றிற்கு மறுவிற்பனை செய்ய முடியவில்லை என்பதோடு நற்பெயர் இழப்பு உட்பட அக்குறிப்பிட்ட கொடுக்கல்வாங்கலில் குறிப்பிடத்தக்க இழப்புக்கயையும் சந்தித்தது. அதேவேளை, அவ்வியாபாரத்தில் தினேஷிக்கு பங்கொன்றிருப்பதாகவும் பங்காளர்கள் அறிந்தனர்.

(40 புள்ளிகள்)

(இ) SC தனது வியாபாரத்தினை விருத்தி செய்ய நகர எல்லைக்குள் புதியதொரு கிளையொன்றினை ஆரம்பிக்க முடிவு செய்தது. இந்நோக்கத்திற்காகப் புதிதாக கட்டப்பட்ட வணிக வளாகத்தில் கடையிடமொன்றினை குத்தகைக்கு எடுக்க சுனில் குமார் என்பவனை அணுகினான். பங்குடைமை இலாபத்தில் இருந்து மாதந்தோறும் குத்தகையை செலுத்த SC உடன்பட்டது. வெற்றிகரமான தொழில்முனைவோனான குமார், SC இற்கு சந்தைப்படுத்தல் மற்றும் அதன் வியாபாரத்தினை மேம்படுத்தல் தொடர்பில் பல சந்தர்பங்களில் ஆலோசனை வழங்கினான். அவ் ஆலோசனைப்படி, SC இலாபமொன்றினை ஈட்டியதோடு அத்தகைய சேவை வழங்கும் போதெல்லாம் அதற்காக ஆலோசனைக் கட்டணத்தினை SC குமாருக்குச் செலுத்தியது. சுனில் குமாரை பலமுறை SC இல் பங்குதாராக சேருவதற்கு அழைத்தான். சில சந்தர்ப்பங்களில் சுனிலின் அழைப்பின் நிமித்தம் குமார் பங்குடைமை விவகாரங்களில் தன்னை பிரதிநிதித்துவப் படுத்தினான். குமார் தற்போது SC இன் பங்குதாரரொருவன் என்பதாகக் கோருகிறான்.

(20 புள்ளிகள்)

*****